## 2.8 2001 –2002 – முன்னுரிமை பணிகள் குறித்த திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.26

நாள் : 09.04.2002

படிக்க :

1. அரசாணை(நிலை) எண்.220, ஊரக வளர்ச்சித்(மதி1) துறை, நாள்.05.09.2001
2. அரசாணை(நிலை) எண்.221, ஊரக வளர்ச்சித்(மதி1) துறை, நாள்.05.09.2001
3. வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கடித நாள்.24.09.2001
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் நேர்முகக் கடித எண்.90942/2001/திஅ5/நாள்.05.12.2001
5. சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையாளர் நேர்முகக் கடித எண்.க.து.ந.க.எண்.பி6/4827/2001, நாள்.05.12.2001
6. ஊரக வளர்ச்சி இயக்குநர், நேர்முகக் கடித எண்.92772/2001/திஅ5/ நாள்.06.12.2001

**ஆணை**

2001–2002 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் தளர்வு ஆணை வேண்டி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் அரசுக்கு கோரிக்கை அளித்தனர். அதனை அரசு நன்கு பரிசீலித்து, 2001–2002ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்துக்கு, கீழ்காணும் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுகிறது..

2) பார்வை 2–ல் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் கீழ்வரும் மாற்றங்களோடு பின்பற்றப்பட வேண்டும்.

(அ) ஊரகப் பகுதிகளைப் பொறுத்த வரையில் முன்னரிமை பணிகளான நான்கு பணிகளில் ஏதாவது ஒரு பணியையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளையோ எடுத்துச் செய்ய வாய்ப்பே இல்லாத பட்சத்தில் எஞ்சியுள்ள முன்னுரிமை பணிகளைத்தான் எடுத்துச் செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

(ஆ) நகர பகுதியை (பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி) பொறுத்த வரையில் முன்னுரிமைப் பணிகளான நான்கு பணிகளில் ஒரு பணியினையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளையோ எடுத்துச் செய்ய வாய்ப்பே இல்லாத பட்சத்தில் அத்தகைய முன்னுரிமைப் பணிகளுக்கு பதிலாக கீழ்காணும் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிந்துரைக்கலாம்.

i. சத்துணவு மையங்கள் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

ii. மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் பாதுகாப்பு அமைப்புகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல்.

iii. குடிநீர் விநியோகத்தை பொறுத்த வரையில், அசையா அல்லது நிரந்தர சொத்துக்களை ஏற்படுத்தக் கூடிய பணிகளான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் விநியோகக் குழாய்கள் (Distribution Mains) போன்றவைகள் மட்டும் மேற்கொள்ளுதல்.

iv. மாநகரப் பகுதிகளில்அரசுக் கட்டிடங்கள் மற்றும் சாலைகளில் மழைநீர் சேகரித்தல் பணியை மேற்கொள்ளுதல்.

3) சட்டமன்ற உறுப்பினர்கள் பணியிடத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி எக்காரணத்திற்காகவாவது காலி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட தொகுதிகளில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

I. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்ட பணிகள் செயலாக்கத்தில் இருக்குமானால், மேற்படி பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும்.

II. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் பணிகள் தேர்வு செய்யப்பட்டு அறிவுரை பெறப்பட்டும், நிர்வாக காரணங்களினால் 45 நாட்களுக்கு மேல் நிருவாக அனுமதி வழங்கப்படாத இனங்களில்

அத்ததைகய பணிகள் விதிகளுக்குட்பட்டதாக இருப்பின் முழுமையாக செய்து முடிக்கப்பட வேண்டும்.

III. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களால் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மேலே வரிசை எண்.ii–ல் குறிப்பிப்பட்டுள்ள காரணம் தவிர வேறு காரணங்களினால் பணிகள் தேர்வு செய்து செயல்படுத்தாமல் இருப்பின் அத்தகைய பணிகளை தற்போதைய (புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட) சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுடன் எடுத்துச் செய்யலாம்.

IV. முந்தைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில், செலவழிக்கப்படாத சேமிப்புத் தொகைகள் இருப்பின் தற்போதுள்ள (புதியதாக தேர்ந்து எடுக்கப்பட்ட) சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்படி தொகைகளுக்கான பணிகளை தேர்வு செய்து பரிந்துரைக்கலாம் என்று இதன் மூலம் ஆணை வெளியிடப்படுகிறது.

இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் (அ.சா.கு.எண்.718/எப்.எஸ் / P நாள்.23.02.2002) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என். விஜயராகவன்**
அரசு செயலாளர்